மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்:1, உசிலம்பட்டி.
முன்னிலை: திரு.ஆர்.எம்.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் எண்:1
2020-ம் ஆண்டு ஜுன் மாதம் 24-ம் நாள் புதன்கிழமை
சி.ஆர்.எம்.பி.எண்: 195/2020

ஞானமுருகன்
த/பெ.மாரியப்பன்

.. மனுதார்/எதிரி

/ எதிரிடை/

அரசுக்காக: சார்பு ஆய்வாளர்,
உசிலம்பட்டி நகர் காவல் நிலைய
குற்ற எண்:1322/2020

.. எதிர்மனுதார்/புகார்தாரர்

மனுதார்/எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.O.D.ராஜ்குமார், அவர்களும் அரசு சார்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-1 அவர்கள் தொலைபேசி வழியாக ஆஜராகியும் ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1) குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 437ன் கீழ் மனு
2) எதிரி மீது பிரிவு 7(3) LOTTERY ACT, 353 IPC-ன் கீழ் அரசுதரப்பு வழக்கு

மனுதாரர்/எதிரி தரப்பில் பிரிவு 7(3) LOTTERY ACT, 353 IPC-ன் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு கடந்த 20.06.2020-ம் தேதி முதல் இன்றுவரை நீதிமன்ற காவலில் இருந்து வருவதாகவும் மேற்படி எதிரி குற்றமற்றவர், நிரபராதி என்றும் மேற்படி எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரி மீது தற்போது எந்த வழக்கும் நிலுவையில் இல்லை எனவும், எதிரியின் வலது காலில் நீரழிநோய் பாதிக்கப்பட்டு ஆறாதபுண் இருப்பதாகவும், வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டு விட்டது எனவும், நீதிமன்றம் பிணையில்விடும் பட்சத்தில் தக்க பிணையதாரர்கள் தர தயாராக இருப்பதாகவும், எனவே, மனுதார்/எதிரியை பிணையில் விடுவிக்கும்படி வாதிடப்பட்டது.

எதிர்மனுதார்/புகார்தாரர் தரப்பில் வழக்கு புலன்விசாரணையில் இருந்து வரும் காரணத்தாலும், எதிரி மீது உசிலம்பட்டி நகர் காவல்நிலைய குற்ற எண்: 115/2020 Tamil Nadu Lottery Act-ன் கீழான வழக்கு நிலுவையில் உள்ளதாகவும், எதிரியை பிணையில் விட்டால் வழக்கு வாய்தாவிற்கு ஆஜராகமாட்டார் என்றும், தடை செய்யப்பட்ட லாட்டரியை சுயலாபத்திற்கு தொடர்ந்து விற்பனை செய்ய வாய்புள்ளதாலும் வெளிமாநிலம் மற்றும் வெளி மாவட்டம் சென்று தலைமறைவாகிவிடுவார் என்றும், எனவே எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. .

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. எதிரி கடந்த 20.06.2020-ம் தேதி முதல் இன்றுவரை நீதிமன்றகாவலில் இருந்து வருகிறார் என்பதாலும், குவிமுச பிரிவு 161(3) வாக்குமூலம் 3 நபர்களிடம் விசாரித்து பெற்றுவிட்டதாலும், வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டுவிட்டதாலும், வழக்கின் முக்கிய பகுதியின் விசாரணை முடிக்கப்பட்டுவிட்டதாலும், வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு எதிரிக்கு நிபந்தனையுடன் கூடிய பிணை வழங்குவது நீதியின்பால் உகந்தது என முடிவு செய்கிறது.

Scanned with CamScanner

எனவே, மனுதார்/எதிரி சிறை அதிகாரியிடம் சொந்த பிணை ரூ.10,000 கொடுக்கவேண்டும். அதன் பின்னர் மனுதாரர்/எதிரியை விடுவிக்கவேண்டும்.

2. எதிரி Lock down முடிந்த பிறகு இந்நீதிமன்றத்தில் ஆஜராகி தனக்காக இரு நபர்கள் தலா ரூ.10000க்கு ஜாமீன் சான்றுடன் பிணைமுறி அளிக்கவேண்டும்.

3.அதன்பிறகு தினமும் காலை 10.00 மணிக்கு எதிர்மனுதாரர் காவல்நிலையத்தில் ஆஜராகி மறு உத்தரவு வரும்வரை கையெழுதித்திட இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

2020-ம் ஆண்டு ஜுன் மாதம் 24-ம் நாள் என்னால் e-mail மூலம் பகரப்பட்ட உத்தரவாகும்.

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் எண்:1,உசிலம்பட்டி.

நகல்:

1.சிறைக்கண்காணிப்பாளர்,
மாவட்ட சிறை, விருதுநகர்.

2.சார்பு ஆய்வாளர்,
உசிலம்பட்டி நகர் காவல்நிலையம்

Scanned with CamScanner